AL/2021(2022)/46/T-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

| | | |
|---|---|---|
| හින්දු ශිෂ්ටාචාරය I<br>**இந்து நாகரிகம் I**<br>Hindu Civilization I | **46 T I** | පැය දෙකයි<br>*இரண்டு மணித்தியாலம்*<br>*Two hours* |

**அறிவுறுத்தல்கள் :**

- ✳ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ✳ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ✳ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ✳ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி (×)** இடுவதன் மூலம் காட்டுக.

**1.** சிந்துவெளி நாகரிக காலத்தில் நிலவியதாகக் கருதப்படும் வழிபாட்டு முறைகளைக் கொண்ட தொகுதி
(1) பிதிரர் வழிபாடு, வீரபத்திரர் வழிபாடு
(2) பசுபதி வழிபாடு, தரைப்பெண் வழிபாடு
(3) லிங்க வழிபாடு, கண்ணகி வழிபாடு
(4) யம வழிபாடு, ரிஷி வழிபாடு
(5) பசுபதி வழிபாடு, ரிஷி வழிபாடு

**2.** வேத காலத்தில் வைத்தியர்களுள் தலைசிறந்த வைத்தியநாதனாகப் போற்றப்பட்ட தெய்வம்
(1) உருத்திரன் (2) வருணன் (3) இந்திரன்
(4) அதிதி (5) பூஷன்

**3.** பெண்களின் நல்வாழ்வு பற்றிய 'ஸ்திரீகர்மாணி' என்ற மந்திரம் இடம்பெறும் நூல்
(1) இருக்கு வேதம் (2) பிராமணங்கள் (3) அதர்வ வேதம்
(4) ஆரணியகம் (5) மகாபாரதம்

**4.** "அன்பே சிவம்" எனச் சிவனைப் போற்றியவர்
(1) உமாபதி சிவாச்சாரியார்
(2) உய்யவந்த தேவர்
(3) மெய்கண்டார்
(4) திருமூலர்
(5) அருணந்தி சிவாச்சாரியார்

**5.** சாக்த ஆகமங்களைக் குறிக்கும் மற்றொரு பெயர்
(1) தந்திரங்கள் (2) சிரௌதம் (3) தேவிமாகாத்மியம்
(4) ஸ்ரீவித்யா (5) சண்டிகா

**6.** ஆகமங்களில் ஞானபாதம் கூறும் பொருள் மரபைக் குறிப்பது
(1) அட்டாங்க யோகங்கள் (2) முப்பொருள் உண்மை (3) உற்சவம்
(4) ஆலய அமைப்பு (5) பிராயச்சித்த விதி

**7.** இறைவனை "வேத நான்கினும் மெய்ப்பொருள் ஆவது நாதன் நாமம் நமச்சிவாயவே..." என தேவாரத்தினால் போற்றியவர்
(1) சுந்தரர் (2) அப்பர் (3) சம்பந்தர்
(4) மணிவாசகர் (5) காரைக்காலம்மையார்

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka ,

8. வேத காலத்தில் தெய்வங்களிடையே அவிர்ப்பாகம் கொண்டு செல்லும் தேவதூதனாக விளங்கிய தெய்வம்
(1) மித்திரன் (2) வருணன் (3) அக்கினி
(4) சவிதா (5) பர்ஜன்யன்

9. சங்கரர் தமது கோட்பாட்டில் உலகம் உண்மையல்ல என்பதற்கு முன்வைத்த வாதம்
(1) அவச்சேத வாதம் (2) பிரதிபிம்ப வாதம் (3) விவர்த்த வாதம்
(4) அநிர்வசநீயம் (5) பரிணாம வாதம்

10. இந்து தத்துவ மூலங்களில் 'பிரஸ்தானத்திரயம்' என்பதில் அடங்கும் மூன்று நூல்களின் தொகுதி
(1) பிராமணம், ஆரணியகம், வேதாங்கம்
(2) இருக்கு, யசுர், சாமம்
(3) உபநிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை
(4) மகாபாரதம், இராமாயணம், சிவரகசியம்
(5) ஸ்ரீபாஷ்யம், சிவானந்தலஹரி, மாண்டுக்கிய காரிகை

11. இலங்கையில் புகழ்பெற்ற தான்தோன்றீச்சரங்களில் ஒன்று காணப்படும் இடம்
(1) தெவிநுவர (2) நல்லூர் (3) திருக்கேதீச்சரம்
(4) கொக்கட்டிச்சோலை (5) கீரிமலை

12. "முப்பொருள் உண்மையும் ஐவகைப் பேதங்களும் நிலையானவை" எனக் கூறும் தத்துவம்
(1) துவைதம் (2) அத்வைதம் (3) சிவாத்துவிதம்
(4) விசிஷ்டாத்வைதம் (5) துவைதாத்வைதம்

13. இந்துச் சிற்பங்களில் இடம்பெறும் பல்வேறு குறியீட்டு அர்த்தங்களை வெளிப்படுத்துபவை
(1) கையமைதிகள் (2) ஆசன நிலைகள் (3) பங்க அமைதிகள்
(4) ஆடை அணிகலன்கள் (5) கேச அலங்காரம்

14. ஆலயத்தில் நிகழும் வழிபாட்டில் "உலகில் வாழும் மக்கள் அனைவரும் நலமே வாழ்வார்களாகுக" என்ற ஆசியை சிவாச்சாரியார் எப்போது வழங்குவார்?
(1) திருப்பணியின்போது (2) ஆலய சேவையின்போது
(3) சுவாமி எழுந்தருளும்போது (4) இறைவனுக்கு நிகழும் பூசையின் நிறைவில்
(5) நைவேத்தியம் வழங்கும்போது

15. சிவாகமங்களில் கிரியாபாதம் கூறும் 'பிராயச்சித்தம்' என்பது எதனைக் குறிக்கின்றது?
(1) ஆலயத்தில் ஏற்படும் குறைநிவர்த்தி (2) அக்கினி வளர்த்தல்
(3) அபிஷேகம் செய்தல் (4) யாகபூசை
(5) இறைவனுக்குரிய திருவிழா

16. 'சிவஞானபோதத்தின் வழிநூல்' எனப் போற்றப்படும் சித்தாந்த சாத்திரம்
(1) திருவுந்தியார் (2) திருக்களிற்றுப்படியார் (3) சிவஞானசித்தியார்
(4) உண்மைநெறி விளக்கம் (5) சங்கற்பநிராகரணம்

17. குளக்கோட்டனின் திருக்கோணேஸ்வர ஆலயப் பணிகள் பற்றி அறிய உதவும் சான்றாதாரம்
(1) சூளவம்சம் (2) பதவியாக் கல்வெட்டு (3) திருக்கரசைப் புராணம்
(4) தட்சணகைலாச புராணம் (5) ஸ்ரீ கைலாசநாத புராணம்

18. ஆலயக் கட்டடங்களை சாஸ்திரரீதியில் நிர்மாணிப்பதில் தேர்ச்சி பெற்றவன்
(1) புரோகிதன் (2) சிற்பி (3) சூத்திரகிராகி
(4) வர்த்தகி (5) ஸ்தபதி

19. சிலாபம் ஸ்ரீ முன்னேஸ்வரம் ஆலயத்தில் முன்னைநாதர் சுவாமியுடன் எழுந்தருளியுள்ள அம்பாளின் பெயர்
(1) ஸ்ரீ வடிவாம்பிகை (2) பார்வதி அம்பாள் (3) கௌரி அம்பாள்
(4) மாதுமையாள் (5) கமலாம்பிகை

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**20.** தென்னாட்டுச் சைவ மரபில் இறைவனைத் தோழமை உறவில் வழிபட்ட நாயனார்
(1) கண்ணப்பர் (2) சுந்தரர் (3) பூசலார்
(4) சிறுத்தொண்டர் (5) அப்பர்

**21.** சோழர்காலத் தஞ்சைப் பெரிய கோயிலின் மறுபெயர்
(1) தோணிபுரத்தீசர் கோயில் (2) திருவீரட்டானேசுவரர் கோயில்
(3) ஏகாம்பரேசுவரர் கோயில் (4) தென்திசைமேரு
(5) கைலாசநாதர் கோயில்

**22.** மாமல்லபுரக் கணேசர் கோயிற் கல்வெட்டின் மூலம் தனது ஆழ்ந்த சிவபக்தியினை வெளிப்படுத்திய பல்லவ மன்னன்
(1) இரண்டாம் நரசிம்மவர்மன் (2) பரமேசுவர மன்னன்
(3) மகேந்திரவர்மன் (4) நந்திவர்மன்
(5) சிம்மவிஷ்ணு

**23.** யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்த ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் வெளிவந்த நூல்களில் ஒன்று
(1) சைவசமய சிந்தாமணி (2) நடராஜ வடிவம்
(3) சைவதூஷண பரிகாரம் (4) ஞானரத்தினாவளி
(5) சரசோதிமாலை

**24.** சிவாலயங்களின் விமானத்தின் கோஷ்டங்களில் இடம்பெறும் மூன்று தெய்வங்களைக் கொண்ட தொகுதி
(1) இலிங்கோற்பவர், தட்சணாமூர்த்தி, பிரம்மன்
(2) மகாவிஷ்ணு, பிரம்மன், சந்திரசேகரர்
(3) இலிங்கோற்பவர், பிரம்மன், காலாரி
(4) திரிபுராந்தகர், தட்சணாமூர்த்தி, விஷ்ணு
(5) உமாமகேசுவரர், அர்த்தநாரீசுவரர், சோமாஸ்கந்தர்

**25.** இந்துப் பண்பாட்டின் அறிவு வளர்ச்சிக்காக வடமொழி இலக்கிய வரலாறு, சைவத் திருக்கோயிற் கிரியை நெறி ஆகிய நூல்களை வெளியிட்ட இலங்கை அறிஞர்
(1) பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் (2) காசிவாசி செந்திநாதையர்
(3) அருணாசல தேசிகர் (4) சுவாமி ஞானப்பிரகாசர்
(5) பேராசிரியர் க. கைலாசபதி

**26.** "என்னை இறப்பிலிருந்து இறவாமைக்கு இட்டுச் செல்வாயாக" என்ற வேண்டுதல் இடம்பெறும் நூல்
(1) மகாபாரதம் (2) பிருகதாரண்யக உபநிடதம் (3) இராமாயணம்
(4) சுக்கிர நீதி (5) தைத்திரிய உபநிடதம்

**27.** அத்வைதக் கோட்பாட்டின் திறவுகோலாக அமையும் வகையில் கௌடபாதர் இயற்றிய நூலின் பெயர்
(1) பிரமசூத்திரம் (2) மாண்டூக்கிய காரிகை (3) விவேக சூடாமணி
(4) வேதாந்த சங்கிரகம் (5) வேதாந்த தீபம்

**28.** சங்கரர் ஆற்றிய முக்கிய பணிகளில் ஒன்று
(1) ஆலய சேவை (2) அடியார் சேவை
(3) வேதாந்த மடங்களை அமைத்தல் (4) பூசைக்கு மலர் கொய்தல்
(5) ஆலயத் திருப்பணி

**29.** சைவ மக்களுக்கு சைவ சமயத்தின் ஆன்மீக வழியை குருசீட மரபை அடிப்படையாகக் கொண்டு நூல்களின் மூலம் விளக்கிக் கூறியவர்கள்
(1) சிவாச்சாரியார்கள் (2) ஆலய அறங்காவலர்கள் (3) சந்தான குரவர்கள்
(4) பண்ணிசை பாடுவோர் (5) புராண படனகாரர்

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**30.** பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களுள் நடுநாயகமாக விளங்குவது
(1) சிவஞானபோதம் (2) சிவப்பிரகாசம் (3) உண்மை விளக்கம்
(4) நெஞ்சுவிடு தூது (5) திருக்களிற்றுப்படியார்

**31.** சங்க இலக்கியம் மக்களுக்கு அறிவுறுத்தும் பயனுள்ள வாசகமாவது,
(1) என் கடன் பணி செய்து கிடப்பதே. (2) யாதும் ஊரே யாவரும் கேளிர்.
(3) நமச்சிவாய வாழ்க; நாதன் தாழ் வாழ்க. (4) கோபுர தரிசனம் கோடி புண்ணியம்.
(5) பெற்றோரைப் பேணு.

**32.** 'இந்திய மருத்துவத்தின் தந்தை' எனப் போற்றப்படுபவர்
(1) வராகமிகிரர் (2) ஆரியபட்டர் (3) தன்வந்திரி
(4) லாட தேவர் (5) பிரம குப்தர்

**33.** தமிழகத்தில் வைணவ சமயத்தை வளம்படுத்துவதற்காக ஆழ்வார்கள் மேற்கொண்ட பணிகளில் முதன்மையானதாகக் கருதத்தக்கது
(1) ஆலய சேவை
(2) புராண படனம் செய்தமை
(3) திருப்பணிகளுக்கு உதவியமை
(4) தனிமையில் தியானத்தில் ஈடுபட்டமை
(5) திருமால் மீது தமிழில் தோத்திரம் பாடி பக்தியை வளர்த்தமை

**34.** இந்துக்களின் அரசியல் பொருளாதாரக் கொள்கைகள் பற்றிய விபரங்களைத் தரும் நூல்
(1) கைவல்ய நவநீதம் (2) பராசரஸ்மிருதி (3) அர்த்த சாஸ்திரம்
(4) ஞானாமிர்தம் (5) மானசாரம்

**35.** இலங்கையில் பொலன்னறுவைக்கால கோயில்களில் கண்டெடுக்கப்பட்ட உலோக விக்கிரகங்களில் இரண்டினைக் கொண்ட தொகுதி
(1) சண்டேசுவரர், பைரவர் (2) நடராஜர், சோமாஸ்கந்தர்
(3) காரைக்காலம்மையார், தட்சணாமூர்த்தி (4) ஷண்முகர், திரிபுராந்தகர்
(5) கண்ணகி, திரௌபதி

**36.** சிற்பக்கலை மரபில் சிற்பக்கலைஞன் உச்சரிக்கும் தியானமந்திரங்களின் பயனாக அமைவது
(1) விக்கிரங்களைச் சிற்ப பிரமாணங்களுக்கேற்ப மரபு வழியில் வடித்தெடுத்தல்
(2) தன்னுடன் பணியாற்றுபவர்களுக்கு நன்மை கிடைத்தல்
(3) சமூகத்திற்கு நன்மை கிடைத்தல்
(4) அழகுணர்வை உண்டுபண்ணுதல்
(5) தனக்கு நன்மை கிடைத்தல்

**37.** குப்தர்காலக் கோயிற் கட்டடக்கலையின் பிரதான பாணியாவது
(1) நாகர பாணி (2) வேஸர பாணி (3) திராவிட நாகர பாணி
(4) நாகர வேஸர பாணி (5) திராவிட பாணி

**38.** "ஓசை ஒலி எலாம் ஆனாய்..." என இறைவனைப் போற்றி இசைக்கலைக்கு வளமூட்டியவர்
(1) சேக்கிழார் (2) நம்பியாண்டார் நம்பி (3) அப்பர்
(4) சுந்தரர் (5) திலகவதியார்

**39.** தமிழகத்தில் தீயின் அம்சமாக சிவபெருமானை வழிபடும் திருத்தலம்
(1) திருவையாறு (2) சிதம்பரம் (3) திருக்காளத்தி
(4) திருவண்ணாமலை (5) திருக்கடவூர்

**40.** 'ஐந்தாம் வேதம்' எனப் போற்றப்படுவது
(1) தர்மசாத்திரம் (2) வேதாங்கம்
(3) மகாபாரதம் (4) வைணவ ஆகமம்
(5) கிருஹ்ய சூத்திரங்கள்

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,

- **41** தொடக்கம் **45** வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுகளை வாசித்து, அவற்றுக்குப் பொருத்தமானவற்றை பின்வரும் அட்டவணையின் **I, II, III, IV** ஆகிய நிரல்களிலிருந்து தெரிவுசெய்க.

| I | II | III | IV |
|---|---|---|---|
| A வேதாந்தக் கோட்பாட்டை விளக்குவது | F சமயப் பிரசங்கம் மூலம் சமய விழிப்புணர்வு | K பெரியாரைப் போற்றுதல் | P தலப் பெருமை கூறுவன |
| B பிறர் நலம் பேணல் | G சிவனது தெய்வீகப் பெருமை கூறுவன | L கல்வெட்டுக்கள் | Q இசை மற்றும் பண்ணிசைக் கச்சேரி |
| C சமய விழாக்களின் நேரடி வர்ணனை | H விருந்தோம்பல் | M நமசிவாய மந்திரத்தைப் போற்றுவன | R பகவானிடம் சரணாகதி அடைதல் |
| D தொல்பொருட் சின்னங்கள் | I அவதாரக் கோட்பாட்டைக் கூறுவது | N சமய அறிஞர் பேட்டிகள் | S உண்மை பேசுதல் |
| E இசைத்தன்மை வாய்ந்தவை | J இலக்கியச் சான்றுகள் | O கர்ம யோகம் | T வெளிநாட்டார் குறிப்புகள் |

**41.** மக்கள் மண்ணில் நல்லவண்ணம் வாழ இந்து சமயம் கூறும் போதனைகளைக் கொண்ட தொகுதி
(1) A, G, L, T (2) B, H, K, S (3) C, H, O, T (4) D, J, K, P (5) E, H, N, R

**42.** பகவத்கீதையின் சிறப்பம்சங்களைக் கொண்ட தொகுதி
(1) A, I, O, R (2) B, J, L, S (3) C, F, K, T (4) D, I, L, Q (5) D, G, M, S

**43.** இந்துப் பண்பாட்டை மக்களிடையே கொண்டு செல்லும் ஊடகங்களின் செயற்பாடுகளைக் கொண்ட தொகுதி
(1) B, H, M, Q (2) C, F, N, Q (3) D, H, K, P (4) E, J, O, S (5) E, J, L, T

**44.** இந்து நாகரிக வரலாற்றை அறிய உதவும் மூலாதாரங்களைக் கொண்ட தொகுதி
(1) A, G, O, R (2) B, H, L, S (3) C, H, K, T (4) C, F, O, R (5) D, J, L, T

**45.** நாயன்மார்களின் தெய்வீகப் பாடல்களின் பயன்களைக் கொண்ட தொகுதி
(1) B, H, K, S (2) C, F, K, T (3) D, H, L, T (4) E, G, M, P (5) E, F, M, Q



Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,

● **46** தொடக்கம் **50** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் **பொருந்தாததைத்** தெரிவுசெய்க.

**46. இந்துக் கலையின் சிறப்பு**

(1) கலை ஒரு யோக சாதனம் எனக் குறிப்பிடப்படுகின்றது.
(2) கலை என்பது அளவு பொருத்தத்துடன் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டது.
(3) கலையுணர்வு பக்தனை மனித நிலையிலிருந்து தெய்வீக நிலைக்கு உயர்த்திவிடும்.
(4) இலங்கையில் அறிஞர் எவரும் இந்துக் கலைக் கோட்பாடு பற்றிய நூல்களை வெளியிடவில்லை.
(5) கலை அனுபவத்தின் மூலம் மன ஒருமைப்பாடு ஆன்மீக இன்பம் என்பன கிடைக்கும் எனக் கூறுவர்.

**47. தர்மசாத்திரங்களும் மனிதகுல மேம்பாடும்**

(1) தர்மசாத்திரங்கள் 'ஸ்மிருதி' என்ற பெயரால் வழங்கப்படுகின்றன.
(2) மனித வாழ்வியல் பற்றிய மிகப் புராதன நூல்கள் தர்மசாத்திரங்களாகும்.
(3) தர்மசாத்திரங்கள் ஆச்சிரம தர்மம், அரச தர்மம், சட்டம், நீதி பரிபாலனம் என்பன பற்றிக் கூறுகின்றன.
(4) தர்மசாத்திரங்கள் தனிமனிதனுக்கும் சமூகத்திற்கும் ஏற்ற அன்றாட வாழ்க்கைநெறிகளைக் காட்டும் விதிகளைக் கூறுகின்றன.
(5) நாரதர் போன்றோரது தர்மசாத்திரங்களில் பெண்களின் உரிமைகள் தொடர்பான விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படவில்லை.

**48. இந்துப் பண்பாட்டில் இராமாயணத்தின் மேன்மை**

(1) இந்தி மொழியில் துளசி இராமாயணம் எழுந்தது.
(2) தமிழில் கம்பரால் கம்பராமாயணம் இயற்றப்பட்டது.
(3) இராமாயணத்தின் ஆதிகவியாக வியாஸர் போற்றப்படுகின்றார்.
(4) வடமொழியில் எழுந்த இராமாயணம் இதிகாசங்களில் ஒன்றாகும்.
(5) இராமாயணம் இந்துக்களின் வாழ்வியல் விழுமியங்களுக்கு அடிப்படையாக விளங்குகின்றது.

**49. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் இந்துப் பண்பாடு**

(1) இக்காலத்தில் மக்களிடையே வைரவர் வழிபாடு சிறப்பாகக் காணப்பட்டது.
(2) பிறசமயச் செல்வாக்கு இக்காலப்பகுதியில் காணப்பட்டமையால் சைவசமயம் பாதிப்புற்றது.
(3) இலங்கை வரலாற்றில் 19 ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதி பிறநாட்டவரது ஆட்சிக்காலமாகும்.
(4) இக்காலத்தில் சைவசமயத்தைப் பாதுகாக்க சமயப் பெரியார்கள் பலர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர்.
(5) மக்களிடையே சமய அறிவைப் பரப்ப இக்காலப்பகுதியில் அச்சியந்திரசாலை சார்ந்த வசதிகள் இல்லாதது பெருங்குறைபாடாகும்.

**50. இந்துக்கள் அறிவியலில் பெற்ற ஆற்றலைக் காட்டும் வானியற் சிந்தனைகள்**

(1) பண்டைய வானியற் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(2) வானியல், சோதிடம் பற்றிய சிந்தனைகள் மக்கள் வாழ்வை வளப்படுத்துவன.
(3) இந்திய வானியலாளர்கள் கிரகணம் பற்றிய காரணத்தை அறிந்திருக்கவில்லை.
(4) பண்டைய இந்தியர்கள் வானியல் சார்ந்த விடயங்களில் நிரம்பிய அறிவுடையோராய் விளங்கினர்.
(5) இந்திய வானியல் அறிஞர்களுள் முதலாம் ஆரியபட்டர் வானியல் சார்ந்த புலமையாளராவார்.

* * *

Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

හින්දු ශිෂ්ටාචාරය II
இந்து நாகரிகம் II
Hindu Civilization II

**46 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும் பகுதி **II** இலிருந்து எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I

**1.** இந்துப் பண்பாட்டை வளம்படுத்துவதில் மகாபுராணங்கள் பெறும் முக்கியத்துவத்தை மேல்வரும் தலைப்புகளில் விவரிக்குக.

(அ) புராணங்களின் அமைப்பு
(ஆ) புராணங்களின் பகுப்பு
(இ) புராணங்கள் கூறும் வழிபாட்டு முறைகள்
(ஈ) பிற்காலப் பண்பாட்டு வளர்ச்சியில் அவற்றின் முக்கியத்துவம் (5 × 4 = 20 புள்ளிகள்)

**2.** தமிழகத்தில் பல்லவர்காலக் கோயிற் கட்டடக்கலையின் படிமுறை வளர்ச்சியை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.

(அ) கட்டடக்கலை வளர்ச்சிக்கு மன்னர்களின் பங்களிப்பு
(ஆ) குடைதளிகள்
(இ) மலைதளிகள்
(ஈ) கட்டுத்தளிகள் (5 × 4 = 20 புள்ளிகள்)

**3.** இலங்கையில் இந்து சமய பண்பாட்டு வளர்ச்சியில் சுவாமி விபுலானந்தர் ஆற்றிய பங்களிப்பினை மேல்வரும் தலைப்புகளில் விவரிக்குக.

(அ) வாழ்வியல் அறிமுகம்
(ஆ) சமயப்பணி
(இ) கல்விப்பணி
(ஈ) கலைப்பணி (5 × 4 = 20 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

## பகுதி II

**4.** வேதாந்த தத்துவ வளர்ச்சியில் இராமானுஜரது விசிஷ்டாத்வைதக் கோட்பாட்டின் சிறப்பம்சங்களை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.

(அ) 'விசிஷ்டாத்வைதம்' எனும் சொல்லின் பொருள் விளக்கம் (2 புள்ளிகள்)

(ஆ) ஈஸ்வரன் (6 புள்ளிகள்)

(இ) ஆன்மா (6 புள்ளிகள்)

(ஈ) ஆன்ம விடுதலைக்கான வழிகள் (6 புள்ளிகள்)

**5.** சைவசித்தாந்த தத்துவ மரபில் ஆன்மா பற்றிய கொள்கையை ஆன்மாவின் இயல்புகள், அவற்றின் இலட்சியம் ஆகியவற்றின் அடிப்படையில் விவரிக்குக. (20 புள்ளிகள்)

**6.** இந்துக்களின் வாழ்வியலில் 'அறம்' பெறுகின்ற முக்கியத்துவத்தினை விளக்குக. (20 புள்ளிகள்)

**7.** இந்து அறிவியல் மரபில் மருத்துவக் கலையின் சிறப்பம்சங்களை விவரிக்குக. (20 புள்ளிகள்)

**8.** புராதன இந்துக்கள் பேணி வளர்த்த கல்விப் பாரம்பரியம் பற்றி அதன் நோக்கம், கல்வி முறை ஆகியவற்றின் அடிப்படையில் விளக்குக. (20 புள்ளிகள்)

❋ ❋ ❋

Department of Examinations Sri Lanka ,
Department of Examinations Sri Lanka ,